# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.142/மா/2021
நாள்: 05.04.2022

திரு. J. வேலாயுதம்,
ஈரோடு. – முறையீட்டு மனுதாரர்

1. ஆணையர்,
சேலம் மாநகராட்சி
2. உதவி ஆணையர்,
சூரமங்கலம் வார்டு அலுவலம், சேலம் மாநகராட்சி – எதிர்மனுதாரர்கள்

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், கருப்புசாமி கோயில் ஒத்தக்குதிரை என்ற முகவரியில் வசிக்கும் J. வேலாயுதம் என்பவரின் 25.12.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.12.2021 அன்று பெறப்பட்டு 142/மா/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், கருப்புசாமி கோயில், ஒத்தக்குதிரை என்ற முகவரியில் வசிக்கும் J.வேலாயுதம் என்பவர் தமது மனுவில்

“எனது பெரியப்பா சச்சிதானந்தம் அவரது மனைவி லட்சுமி அம்மாள் சேலம் அரிசிபாளையம் R.D. பால் தெருவில் கதவு எண்.178-ல் குடியிருந்து வந்தார். பின்னர் பெரியப்பா 11.8.1989-ல் இறந்துவிட்டார். பெரியம்மாள் 07.05.2016-ல் இறந்துவிட்டார். இவர்களுக்கு குழந்தைகள் கிடையாது. பெரியப்பாவின் தம்பி ஜெகநாதன் மகன் வேலாயுதம் ஆகிய நான்தான் சட்டப்படியான வாரிசுதாரர் ஆகும். பெரியப்பா வீட்டில் வேலைகாரனாக எடுபிடியாக இளங்கோவன் என்பவன் பணிபுரிந்து வந்தான். வேலைகாரியாக இவனது மனைவி ரேவதி(எ) மல்லிகா சமையல் வேலை செய்து வந்தார். இவர்கள் பெரியப்பாவிற்கு குழந்தைகள் இல்லாத காரணத்தால் சுமார் ரூ.50 லட்சம் பெறுமானமுள்ள கதவு எண்.178 மதராஸ் தாரிசு வீட்டை அபகரித்துகொள்ள திட்டமிட்டு நகராட்சி அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்து கதவு எண்.178-வரி விதிப்பு எண்.1034822 வரி ரூ.2279/- மதராஸ் தாரிசு 75 ச.மீ. மங்களூர் ஓடு 23 ச.மீ உள்ள வீட்டை இளங்கோவன் என்ற பெயரில் நகராட்சியில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்து கொண்டனர்.

2) வரி வதிப்பு எண்.1034822 கதவு எண்.178 ஆவணங்கள் சரி பார்க்க நகராட்சியில் அலுவலர்கள் நேரில் சென்று இளங்கோவன் வசம் விசாரணை செய்ததற்கு இளங்கோவன் லட்சுமி அம்மாள் கதவு எண்.178 உள்ள மதராஸ் தாரிசு வீட்டை கிரயம் செய்து கொடுத்ததாகவும், அக்கிரைய நகல் வைத்து நகராட்சியாக இருந்தபோதே சொத்து வரியை தன் பெயரில் இளங்கோவன் என பெயர் மாற்றம் செய்து கொண்டதாகவும், கிரயப்பத்திர நகலையும் T.R.P. நகராட்சி உத்திரவுகளையும் காண்பிக்க மறுத்துவிட்டார். கேட்டால் மிகவும் கோபப்படுகிறார் என நகராட்சி கடிதம் எண்.கே.20/6699/18 நாள்: 7.11.2018-ல் எனக்கு தெரிவித்து உள்ளனர். வில்லங்க சான்று 1987 முதல் 2016 வரை கதவு எண்.178 வரி எண்.1034822 வரி ரூ.2279/- உள்ள மதராஸ் தாரிசு வீட்டை 33 வருடம் யாருக்கும் கிரயம் / தானம் பத்திரம் எழுதவில்லை. இளங்கோவன் பொய் சொல்கிறான் எப்படியோ நகராட்சியில் பெயர் மாற்றம் செய்து உள்ளார்கள்.

மேலும், கடிதம் எண்.20/7525/18 நாள்:28.12.2018-ல் சுமார் 25 வருடத்திற்கு முன்னர் நகராட்சியாக இருந்த போது சொத்து வரி அலுவலக பதிவேட்டின்படி இளங்கோவன் பெயரில் பதிவாகி உள்ளது எனவும் வரி விதிப்பு எண்.1034822 பெயர் மாற்றம் செய்யப்பட்ட பதிவேடு பதிவறை கட்டரையில் இல்லை எனவும் நகராட்சியினர் எனக்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

பின்னர் சூரமங்கலம் வார்டு ஆபீஸ் ஆணையர் இளங்கோவன் வரி எண்.1034822 கதவு எண் 178 லட்சுமி அம்மாள் கிரயம் செய்து கொடுத்த பத்திரத்தை சூரமங்கலம் நகராட்சி ஆணையர் வசம் காண்பிக்க கோரியும் நகராட்சி உத்தரவு காண்பிக்க கோரியும் நகராட்சி மூலம் நோட்டீஸ் எதுவும் இன்றுவரை அனுப்பவில்லை நகராட்சி வழக்கறிஞர் வசம் இளங்கோவன் பேரில் மேல் நடவடிக்கை எடுக்க அறிக்கை எதுவும் நகராட்சியினர் பெறவில்லை. நகராட்சி அதிகாரிகள் இளங்கோவனை கண்டு பயப்படுகிறார்கள். நான் பல தடவை சூரமங்கலம் நகராட்சியினர் வசம் இளங்கோவனுக்கு நகராட்சி மூலம் அறிவிப்பு நோட்டீஸ் அனுப்ப புகார் மனு கொடுத்தும், நகராட்சியினர் எட்டு தடவை நோட்டீஸ் அனுப்பவில்லை என பதில் கொடுத்துவிட்டார்கள். நகராட்சி மூலம் கதவு எண்.178-க்கு அறிவிப்பு நோட்டீஸ் ஏதும் அனுப்பவில்லை என பதில் கொடுத்துவிட்டார்.

3) எனவே கதவு எண்.178-வரி விதிப்பு எண்.1034822 வரி ரூ.2279/- உள்ள மதராஸ் தாரிசு வீடு லட்சுமி அம்மாள் வசம் இளங்கோவன் கிரயம் பெற்ற அசல் பத்திரத்தையும் நகராட்சியில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட உத்திரவுகளையும் முறைமாமன்ற நடுவம் கோர்ட்டில் நேரில் சமர்ப்பிக்கவும் இளங்கோவன் பேரில் வழக்கு தொடரவும் சாட்சிகளை விசாரிக்கவும் மேலும் வரி எண்.1034822–யை இளங்கோவன் பெயரை ரத்து செய்யவும், வழக்கு தொடர எனக்கும், பிரதிவாதிகள் R. இளங்கோவன் மற்றும் ஆணையர் அவர்கள் சூரமங்கலம் நகராட்சி சென்னை முறைமாமன்ற கோர்டில் நேரில் ஆஜராகி விளக்கமளிக்க எங்களுக்கு விசாரணை சம்மன் அனுப்பி வைக்க உத்திரவிடுமாறு பணிவுடன் கூறுகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

4) இந்நேர்வு தொர்பாக மனுதாரர் 16.2.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டார். 16.2.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

“எனது பெரியப்பா திரு. சச்சிதானம் என்பவரின் மனைவி திருமதி லட்சுமி அம்மாள் என்பவர் சேலம் மாவட்டம், சூரமங்கலம் வார்டு, கோட்டம் 26, அரிசிபாளையம் R.D. பால் தெருவில் கதவு எண்.178ல் குடியிருந்து வந்தார். மேற்கண்ட எனது பெரியப்பா-பெரியம்மா இறந்துவிட்ட நிலையில், எனது பெரியப்பா-பெரியம்மா வீட்டில் வேலை செய்து வந்த எனது பெரியம்மாவின் தம்பி மகன் இளங்கோவன் என்பவர் எனது பெரியம்மா லட்சுமி அம்மாள் என்பவரின் பெயரில் உள்ள மேற்கண்ட வீட்டினை அபகரிக்கும்

பொருட்டு, மாநகராட்சி அலுவலர்களின் உதவியுடன் மேற்கண்ட 178 என கதவிலக்கம் கொண்ட வீட்டிற்கு தனது பெயரில் சொத்து வரி கேட்பினை 25 வருடத்திற்கு முன்னர் மாற்றம் செய்து கொண்டார். (வரி விதிப்பு எண்.1034822 வரி ரூ.2279/-) மேற்கண்ட எனது பெரியப்பா-பெரியம்மா ஆகியோருக்கு குழந்தைகள் இல்லாததால், சட்டப்படி நான் தான் வாரிசுதாரர். வாரிசுதாரரான நான், பத்திரம் ஏதும் இல்லாத மேற்கண்ட இளங்கோவன் பெயரில் எப்படி சொத்து வரி கேட்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டது என மாநகராட்சியில் புகார் மனு அளித்த போது, அம்மனுவின் மீது மாநகராட்சி அலுவலர்களால் சட்டப்படியான நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. மேலும், மேற்கண்ட வீட்டின் கிரயப்பத்திரத்தை மாநகராட்சி அலுவலர்களால் மேற்கண்ட இளங்கோவனிடம் கோரியபோது, இளங்கோவன் பத்திரத்தை காண்பிக்கவில்லை எனவும், வற்புறுத்தி கேட்டால் இளங்கோவன் கோபப்படுகிறார் என்றும் மாநகராட்சி அலுவலர்கள் எனக்கு 7.11.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளனர். மேற்கண்ட 178 என கதவிலக்கம் எண்ணிட்ட வீட்டிற்கு வில்லங்க சான்று (EC) 1987 முதல் 2015 வரையிலான காலத்திற்கு போட்டு பார்த்தபோது 29 வருடங்களாக லட்சுமி அம்மாள் யாருக்கும் கிரயமோ அல்லது தானப்பத்திரமோ செய்யவில்லை என தெரியவருகிறது. எனவே, மேற்கண்ட இளங்கோவன் பொய் சொல்லி மாநகராட்சி அலுவலர்களையும், எங்களையும் ஏமாற்றி வருகிறார். எனவே கதவு எண்.178-ற்கான சொத்துவரி கேட்பினை (வரி விதிப்பு எண்.1034822) ரத்து செய்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அதே சேலம் மாவட்டம், சூரமங்கலம் வார்டு, கோட்டம் 26, அரிசிபாளையம் R D பால் தெருவில் கதவு எண்.178-A (வரி விதிப்பு எண்.1034821) என எண்ணிட்ட மற்றொரு வீட்டையும் மேற்கண்ட இளங்கோவன் போலி பத்திரம் தயார் செய்து எனது பெரியம்மா லட்சுமி அம்மாள் அவர்களின் பெயரில் தற்போதுவரை இருந்து வரும் சொத்துவரி கேட்பினை மாநகராட்சி அலுவலர்களின் உதவியுடன் தனது பெயருக்கு மாற்றம் செய்திட தற்போது முயற்சி செய்து வருகிறார். எனவே, மேற்கண்ட R D பால் தெருவில் கதவு எண்.178-A (வரி விதிப்பு எண்.1034821) என எண்ணிட்ட வீட்டிற்கு வரி விதிப்பு கேட்பினை இளங்கோவன் பெயரில் மாற்றுவதையும் தடுத்து நிறுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.''

5) 16.2.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு மனு மீதான உரிய விவர அறிக்கையுடன் ஆஜராகுமாறு ஆணையாளர் அவரது பிரதிநிதிக்கு (செயற்பொறியாளர் நிலைக்கு குறையாமல்) 29.1.2022 நாளிட்ட சம்மன் அனுப்பப்பட்டது 16.2.2022 அன்றைய விசாரணையில் உதவி ஆணையர் ஆஜராக இயலாததால் 7.3.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. 7.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலக உதவி வருவாய் ஆய்வாளராகப் பணிபுரியும் T. செந்தில் முரளி என்பவர் மாநகராட்சி உதவி ஆணையாளருக்கு பதில் அவரது ஒப்புதலுடன் விசாரணையில் கலந்துகொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார் :

"சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.26, ஆர்.டி.பால் தெரு கதவு எண்.178-க்கானசொத்து வரி கேட்பு (வரி விதிப்பு எண்.1034822) சேலம் மாநகராட்சி, மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதற்கு முன்பே திரு. இளங்கோவன் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக மனுதாரர் திரு. வேலாயுதம் மேற்கண்ட சொத்து வரி கேட்பு போலியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என புகார் அளித்துள்ள நிலையில், மேற்கண்ட சொத்து வரி பெயர் மாற்றம் தொடர்பான ஆவணங்களை மாநகராட்சி அலுவலர்களால் சரிபார்க்க வேண்டி, இளங்கோவன் என்பவரிடம் சொத்திற்கான கிரயப்பத்திரத்தை பார்வையிட கோரியபோது அவர் தொடர்ந்து மறுத்து வருகிறார்.

நான் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்புதான் சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலக உதவி வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்துள்ளேன். கடந்த சில நாட்களாக உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றதால், இந்நிகழ்வில் கவனம் செலுத்த இயலவில்லை. மேற்கண்ட இளங்கோவனிடமிருந்து உரிய அறிவிப்பின் மூலம் மேற்கண்ட சொத்து வரி பெயர் மாற்றம் சம்மந்தமான ஆவணங்களை பெற்று, சொத்து வரி பெயர் மாற்றத்தில் உள்ள முரண்பாட்டினை களைந்து, இன்னும் ஒரு வார காலத்தில் அதன் மீதான மேல் நடவடிக்கையை இம்முறைமன்றத்தில் தெரிவிக்கிறேன்.'' என்று தெரிவித்துள்ளார்.

6) இந்நேர்வு தொடர்பாக உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி ஆணையாளர் (பொறுப்பு) அவர்கள் தமது 14.2.2022 நாளிட்ட அறிக்கையில்

“சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.26-ல், கதவு எண்.178, ஆர்.டி.பால் தெரு சொத்துவரி விதிப்பு எண்.1034822-க்கு அரையாண்டு வரித்தொகை ரூ.1117/-ஆகும். மேற்படி வரிவிதிப்பு சேலம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதற்கு முன்பிருந்தே கேட்பு பதிவேடுகளில் திரு. இளங்கோவன் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், வரிவிதிப்பு எண்.1034822-க்கு சேலம் மாநகராட்சியின் மூலம் நாளது தேதிவரை பெயர் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை எனவும், மேற்காணும் சொத்துவரி விவரங்கள் குறித்து உரிய ஆவணங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் சமர்ப்பித்து, தங்களது பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்து கொள்ளுமாறும், மேல்முறையீட்டாளர் திரு. J.வேலாயுதம் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதங்கள் மூலம் பல்வேறு தேதிகளில் அனுப்பப்பட்டும் நாளது தேதிவரை மேல்முறையீட்டாளரிடமிருந்து எவ்வித தகவல்களும் வரப்பெறவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.'' என்று தெரிவித்துள்ளார்.

7.3.2022 அன்று நேரடி விசாரணையின் போது உதவி வருவாய் அலுவலர் உறுதியளித்தவாறு ஆர்.டி.பால் தெரு, கதவு எண்178-க்கான சொத்துவரி விதிப்பு எண்.1034822 திரு. இளங்கோவன் என்பவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ததற்கான ஆவணங்களை இவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள் சூரமங்கலம் வார்டு அலுவலகம், உதவி ஆணையர் அவர்களிடத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. சமர்ப்பிக்காத பட்சத்தில் தங்களது சொத்துவரி பெயர் மாற்றம் தொடர்பான உத்தரவினை முன் அறிவிப்பின்றி ரத்து செய்து அலுவலக கேட்பு பதிவேட்டில் பெயர் நீக்கம் செய்யப்படும் என்று 14.3.2022 நாளிட்ட அறிவிப்பை சேலம் மாநகராட்சி உதவி ஆணையாளர் திரு. இளங்கோவன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

இந்நேர்வில் மனுதாரரின் முறையீட்டு மனு அவரது வாக்குமூலம் சூரமங்கலம் வார்டு அலுவலக உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் சூரமங்கலம் வார்டு அலுவலக உதவி வருவாய் அலுவலரின் அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் சேலம் அரிசிபாளையம் RD பால் தெரு கதவு எண்.178ல் குடியிருந்து வந்த தனது பெரியப்பா மற்றும் பெரியம்மா இருவரும் இறந்துவிட்ட பின்னர் அந்தவீட்டு வேலைக்காரனாகவும், எடுபிடியாகவும் பணிபுரிந்த இளங்கோவன் என்பவரும் வேலைக்காரியாக பணிபுரிந்த இளங்கோவனின் மனைவி ரேவதி (எ) மல்லிகாவும் தனது பெரியப்பாவிற்கு குழந்தைகள் இல்லாத காரணத்தினால் சுமார் 50 லட்சம் பொருமானமுள்ள கதவு எண்178 மதராஸ் தாரிசுவீட்டை இளங்கோவன் பெயருக்கு நகராட்சி அலுவலர்களுடன் பெயர்மாற்றம் செய்து கொண்டார் என்றும் அவ்வீட்டிற்கு வரி விதிப்பு எண்.1034822 வரி ரூ.2279/- என்று தெரிவித்துள்ளார். ஆனால் மனுதாரர் 16.2.2022 அன்று அளித்துள்ள வாக்குமூலத்தில் இளங்கோவன் தனது பெரியம்மாவின் தம்பி மகன் என்று முன்னுக்கு பின் முரணாக குறிப்பிட்டுள்ளார். மனுதாரரான J.வேலாயுதம் பொய்யான தகவல்களை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துள்ளார். மேலும் சேலம் மாநகராட்சியானது சுமார் 25 வருடத்திற்கு முன்பு நகராட்சியாக இருந்த காலத்திலிருந்தே மேற்குறிப்பிட்ட சொத்துவரி அலுவலக பதிவேட்டின்படி திரு. இளங்கோவன் பெயரிலேயே பதிவாகி உள்ளது என்று உதவி ஆணையாளர்

தெரிவித்துள்ளார். ஆனால் திரு. இளங்கோவன் என்பவர் பெயரில் உள்ள சொத்துவரி விதிப்பு எண்.1034822க்கு சொந்தமான ஆவணங்களை சரிபார்க்க வேண்டும் என கேட்டதற்கு இளங்கோவன் மிகவும் கோபப்பட்டு ஆவணங்களை தர மறுத்துவிட்டார் என்று வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) மற்றும் உதவி வருவாய் அலுவலர் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாக உதவி ஆணையாளர், சூரமங்கலம் வார்டு அலுவலகம், தெரிவித்திருப்பது ஏற்கக் கூடியது அல்ல. இது அதிகாரிகள் தங்களது பொறுப்பை தட்டிக்கழிக்கும் செயலாகவே இம்முறைமன்றம் கருதுவதோடு தன்னுடைய கண்டனத்தையும் பதிவு செய்கிறது. மாநகராட்சி நிர்வாகத்தை கேலிகூத்தாக செய்யும் இந்த விளக்கம் அதிர்ச்சியளிக்கிறது.

எனவே, இந்நேர்வில் திரு. இளங்கோவன் கதவு எண்.178-க்கான வரி விதிப்பு எண்.1034822-ஐ தன் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ததற்கான ஆவணங்களை ஒருவார காலத்திற்குள் சூரமங்கலம் வார்டு அலுவலக உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க உரிய அறிவிப்பினை வழங்கி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் திரு.இளங்கோவன் முறையான ஆவணங்களை சமர்ப்பிக்காத பட்சத்தில் திரு. இளங்கோவன் அவர்களின் சொத்துவரி மாற்றம் தொடர்பான உத்திரவினை இரத்து செய்து அலுவலக கேட்பு பதிவேட்டில் பெயர் நீக்கம் செய்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையர், சேலம் மாநகராட்சி அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. J. வேலாயுதம்,
   கருப்புசாமி கோயில்,
   ஒத்தக்குதிரை,
   கோபி தாலுக்கா, ஈரோடு மாவட்டம் - 638 455.
2. ஆணையாளர்,
   சேலம் மாநகராட்சி, சேலம்.
3. உதவி ஆணையர் ,
   சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
   சேலம் மாநகராட்சி, சேலம்
4. இணை இயக்குநர்,
   ஒருகிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.